52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	6	–	–
54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1,26,51	2	–
பெருமொத்தம்	3,761,16,09	384,22,87	1,429,70,02

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) 30–10–2012 அன்று பேரவைக் கூட்டம் இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (29–10–2012) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நாளை (30–10–2012) செவ்வாய்க்கிழமை அன்று பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 31–10–2012 (புதன்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 1–12–1982 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் இந்து அறநிலையத் துறையின் II(1)/வ.வ.அ.நி/294/82 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து அதற்குப் பதிலாக, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களாலும் மற்றும் அந்நிறுவனங்களின் கிளைகளாலும் தமிழ்நாடு மாநிலத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு

[2012 அக்டோபர் 29

மின்சக்தி உற்பத்தியிலும், அனுப்புகையிலும் மற்றும் பகிர்மானத்திலும் பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும்; மற்றும் (iii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் அனுப்புகை நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்களால் ஆயத்த திட்டப் பணிகளை மேற்கொள்வதில் பயன்படுத்துவதற்கான யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 20–3–2012 ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. (i) 1–4–2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/11(b–5)/2008 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) 23–3–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் பாகம்–II, பிரிவு–1–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/30 (a–3)/2007–ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், கோதுமை, 'ஓட்ஸ்' தானியம், பால்புட்டிகள் மற்றும் பால்புட்டிச் சூப்பான்கள் மற்றும் தலைக் கவசம் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; மற்றும் (iv) யாதொரு வணிகர், சேனிடரி டவல்கள், சேனிடரி நேப்கின்கள், பெல்ட் இல்லாத நேப்கின்கள், குழந்தைகளுக்கான நேப்பிகள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் டயாப்பர்கள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு(பி1)த் துறையின் 27–3–2012–ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில்

2012 அக்டோபர் 29]

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் 4–ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கருவிகளுடன் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 27–3–2012 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கருவிகளையும் சேர்ப்பது குறித்து. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 31–10–2011 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8)த் துறையின் 12–12–2011 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(6)த் துறையின் 3–1–2012 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய–மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தம் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற

2–9–2011 ஆம் நாளிட்ட எண்.த.மி.ஒ.ஆ./மா.ஆ.கு.ஒ/2–29–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8)த் துறையின் 30–3–2012 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/2012), 15–6–2012 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நிதி (பொது மாநில கழகம்) துறையின் 14–6–2012 ஆம் நாளிட்ட 211–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) 35(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், 15–6–2012 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நிதி (பொது மாநில கழகம்) துறையின் 14–6–2012 ஆம் நாளிட்ட 212 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) 35(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2012)

2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2012)

3. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2012)